**<u>காங்கயம் நகராட்சி</u>**
**<u>மன்றக்கூட்டத்தாள்</u>**

**நிகழும் ஸ்ரீ ஹேவிளம்பி வருடம் தமிழ் மாதம் ஆனி 15–ஆம் நாள் ஆங்கில வருடம் 2018 ஜீன் 29-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**<u>மன்றப்பொருள்:1</u>**

**கோப்பு எண் : 781/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP 18-19) 2018–2019ன் கீழ் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்:12981/2018/இ3 நாள்:27.06.2018 ஆம் தேதியிட்ட கடிதத்தில், தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்) | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி (ரூ.கோடியில்) | மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மானிய நிதி (ரூ.கோடியில்) | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி (ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|---|
| காங்கயம் | 2.00 | 0.76 | 0.60 | 0.44 | 0.20 |

எனவே மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்க்காணும் பணியை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றி நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|---|
| 1 | காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 சென்னிமலை சாலை முதல் தொட்டியபட்டி வரை, தொட்டியபட்டி, வார்டு எண்.10 குதிரைப்பள்ளம் ரோடு முதல் செம்மாங்காளிபாளையம் வரை, பங்களாப்புதுார் ரோடு, வார்டு எண்.13 திருப்பூர் ரோடு முதல் வெள்ளியங்காடு வரை தார்சாலை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | **4.850** | **4.50** | **200.00** |

**<u>அலுவலககுறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.900 . நாள்.29.6.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:2</u>**

**கோப்பு எண் : 740 /2018 /இ1**

காங்கயம் நகராட்சி பேருந்துநிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள CC TV கேமராக்கள் பழுதடைந்துள்ளது. இதற்கான கேபிள்கள் பொருத்தி கேமராக்கள் பழுதுகள் சரி செய்து இதனை கண்காணிக்கும் மானிடர்கள் மாற்றியமைக்க வேண்டியுள்ளது. நகராட்சி அலுவலகத்தில் வருவாய் பிரிவில் கணினிகளுக்கான LAND CARD CONNECTION பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 1.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.901 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:3</u>**

**கோப்பு எண் : 831 /2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட தாராபுரம் ரோடு தண்ணீர்பந்தல் வரை மற்றும் சென்னிமலை ரோடு பகுதிகளில் தனியார் குடிநீர் இணைப்புகள் கோரி பொது மக்கள் விண்ணப்பித்துள்ளனர். ஆனால் இப்பகுதிகளில் பகிர்மான குழாய்கள் அமைக்கப்படவில்லை. எனவே இப்பகுதிகளில் குழாய் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.. இந்த பணிகளுக்கான உத்தேச மதிப்பீடு ரூ. 6.20 (ரூபாய் ஆறு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.902 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:4</u>**

**கோப்பு எண் : 515 / 2017 / எச்1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2018–19 ன் கீழ் பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான கிருமி நாசினி (Lemon cross oil) வினியோகம் செய்திட 25.05.2018–ல் நடைபெற்ற டெண்டரில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் | மதிப்பீட்டை விட | - 16.94 % | குறைவு |
| 2. ஸ்ரீ விநாயக பார்மஸி | மதிப்பீட்டை விட | - 13.89 % | குறைவு |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் எனும் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். மன்றத்தின் முன் அனுமதி பெற்று பொது சுகாதார அவசர அவசியம் கருதி வினியோகம் செய்திடவும் அதற்கான தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 903 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:5</u>**

**கோப்பு எண் : 516/2018/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2018—19 ன் கீழ் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட தாராபுரம் ரோடு மேற்கு பகுதியில் குழாய் விஸ்தரிப்பு செய்தல், கொங்கு நகர் பகுதியில் சிறு மின்விசைப்பம்பு திட்டத்தின் நீரேற்று குழாய் மாற்றியமைத்தல், அய்யாச்சாமி காலணி பகுதியில் மெயின்குழாயை சாலை ஓரமாக மாற்றியமைத்தல், செளடாம்பிகை நகர் மற்றும் லட்சுமி நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் இணைப்பு வேலைகள் செய்தல், ஐ.பி டேங்கில் இணைப்பு வேலைகள் செய்தல், லட்சுமி நகர் பகுதியில் புதிதாக தண்ணீர் தொட்டி அமைத்து தண்ணீர் தொட்டி பொருத்துதல், பொதிகை நகர் பகுதியில் கேட்வால்வு பொருத்துதல், 7 மேல்நிலைத்தொட்டிகளுக்கும் தண்ணீர் அளவு பார்க்கும் அளவுகோல் மற்றும் இன்டிகேட்டர் பொருத்தும் பணி. பணிக்காக 31.05.18—ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட + 4.98 % | அதிகம் |
| 2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட + 5.50 % | அதிகம் |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 904. நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:6</u>**

**கோப்பு எண் : 518/2018/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2018—19 ன் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அய்யாச்சாமி நீரேற்ற நிலையத்தில் 2000 திறன் கொண்ட புதிய மின்மோட்டார் பொருத்துதல், ஐ.பி டேங்க் மற்றும் எம்.ஜு.ஆர் காடு டேங்க் ஆகியவற்றில் நீர் ஏற்றுவதற்கு ஏற்ப அமைப்புகள் ஏற்படுத்தும் பணிக்காக 31.05.18—ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. திருமணி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட | + 4.90 % | அதிகம் |
| 2. எஸ்.சுப்பையா | மதிப்பீட்டை விட | + 5.75 % | அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். திருமணி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 905 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:7**

**கோப்பு எண் : 502/2018/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2018–19 ன் கீழ் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் வீதியில் கேட்வால்வுகள் பொருத்துதல், ஐ.பி டேங்கிளிருந்து வரும் 8” குழாயை சந்தைப்பேட்டை டேங்க் குடிநீர் விநியோகத்தில் இணைத்தல், சந்தைப்பேட்டை மற்றும் கோவை ரோடு மேல்நிலைத்தொட்டிகளில் இணைப்பு வேலைகள் செய்தல், லட்சுமி நகர் பகுதியில் புதிதாக 5000 லிட்டர் தண்ணீர் தொட்டி அமைக்கும் பணிக்காக 31.05.18–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட | + 4.95 % | அதிகம் |
| 2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட | + 6.20 % | அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 906 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:8**

**கோப்பு எண் : 844 /2018 /இ1**

காங்கயம் நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் கணினி – 26 No, பிரிண்டர் 6 – No(Single Sider) 9No (Double Side) Networking – 3 No ஆகியவற்றில் பாதுகாப்பிற்காக Antivirus-26 Nos பெருத்த வேண்டியுள்ளது. மேற்படி உபகரணங்கள் பழுதடையும்பொழுது அலுவலக பணிகள் பாதிக்கப்படுகிறது. எனவே இதனை உடனுக்குடன் பழுதுகள் சரிசெய்து பொருத்த வருடாந்திர பராமரிப்பு பணியை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளலாம். இந்த பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 1.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.907 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:9**

**கோப்பு எண் : 861 /2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 9 வரையிலான பகுதிகளின் அமைக்கப்பட்டுள்ள சிறுமின் விசைப்பம்பு திட்டங்கள் மற்றும் குடிநீர் வினியோக மெயின் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுளை குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் உடனுக்குடன் பழுதுகள் சரி செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்படி பராமரிப்பு பணிகளை ஒப்பந்த அடிப்படையில் 1/8/2018 முதல் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.908 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:10**

**கோப்பு எண் : 882 /2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அய்யாசாமி நகர் காலணி பகுதியில் மூன்றாவது குறுக்கு வீதி (மெயின் ரோடு முதல் கிழக்காக கம்யூனிஸ்ட்கட்சி அலுவலக வழியாக செல்லும் சாலை) மண் சாலை மற்றும் வடிகால் மிகவும் பழுதடைந்துள்ளாதால் இதனை சீரமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். மேற்படி பராமரிப்பு பணிகள் அவசியமாக உள்ளது, இந்த சீரமைப்பு பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.909 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:11**

**கோப்பு எண் : 912/2018 /இ1**

காங்கயம் நகராட்சி பகுதிகளுக்கு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் மற்றும் அமராவதி குடிநீர் திட்டம் ஆகிய குடிநீர் திட்டங்களின் மூலமாக நான்கு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரைப்படி நகராட்சி குடிநீர் விநியோக பகுதிகளை சிறு மீட்டர் பொருத்தப்பட்ட தொகுதிகளாக பிரித்து தினசரி 24 மணி நேரமும் சீரான அழுத்தத்துடன் குடிநீர் இழப்பின்றி விநியோகம் செய்யும் வகையில் DMA என்ற நிலையில் அமைக்க வேண்டியுள்ளது. இதற்கு குடிநீர் திட்டத்தில் தேவையான உட்கட்டமைப்புகள் மற்றும் அபிவிருத்திபணிகள் மேற்கொள்வது சம்பந்தமாக ஆய்வுசெய்து கண்டறிய வேண்டியுள்ளது.

இப்பணியை மேற்கொள்ள, தமிழ்நாடு அரசிதழ் (அசாதாரணம்) எண்.333 சென்னை நாள்.17.10.2017ன்படி தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதி 1998 பிரிவு 16–ன் கீழ் கூடுதலாக சேர்க்கப்பட்ட உபபிரிவு J-ன் கீழ் மற்றும் அதன் விளக்க உரையின் படியும் **“Tamil nadu water investment company ltd (Twic)**” எனும் நிறுவனத்தை ஆலோசகராக நியமிக்க ஒப்பந்தப்புள்ளி கோரும் விதியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, Twic `நிறுவனத்திடம் காங்கயம் நகராட்சிக்கு மேற்படி DMA முறையில் உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள ஆய்வு பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான தெரிவிக்கப்படும் ஆலோசனைக் கட்டணத்தை முறைப்படி அனுமதி பெற்று செலுத்தவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.910 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:12</u>**

**கோப்பு எண் : 884 /2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட ஜெகதீஸ் நகர் மற்றும் பாரத் நகருக்கு மத்தியில் ஒரு வடிகால் 2 மீ அகலத்தில் செல்கிறது, இதனால் ஜெகதீஸ் நகர் பாரத் நகர் பொதுமக்கள் இந்த இரண்டு பகுதிகளுக்கும் செல்ல வடிகால் குறுக்கே வருவதால் பழையகோட்டை ரோடு வழியாக சுற்றி செல்ல வேண்டியுள்ளது. எனவே இந்த சிரமத்தை குறைக்க வடிகால் மீது ஒரு பாலம் அமைத்து கொடுக்குமாறு இப்பகுதி பொதுமக்கள் விண்ணப்பித்துள்ளனர். எனவே மேற்படி வடிகால் மீது பாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 2.50 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 911 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:13</u>**

**கோப்பு எண் : 883 /2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 முதல் 18 வரையிலான பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் சிறுமின் விசைப்பம்பு திட்டங்கள் காவிரி மற்றும் அமராவதி குடிநீர் வினியோக மற்றும் மெயின் குழாய்களில் ஏற்படும் பழுதுளை குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் உடனுக்குடன் பழுதுகள் சரி செய்து கொடுக்க வேண்டியுள்ளது. எனவே இதற்கு ஏதுவாக 1/8/2018 முதல் ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 912 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:14**

**கோப்பு எண் : 755/2018/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி **2018–19** ன் கீழ் ரூ.**2.00** இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிமலை ரோடு எரிவாயு தகனமேடையில் சுற்றுச்சுவர் மற்றும் வடிகால் ஆகியவற்றை சீரமைக்கும் பணிக்காக **15.06.18**–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு.எஸ்.சுப்பையா | மதிப்பீட்டை விட + 4.95 % | அதிகம் |
| 2. திரு.ஆர்.வடிவேல் | மதிப்பீட்டை விட + 6.20 % | அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.913 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:15**

**கோப்பு எண் : 639/2017/ அ2**

காங்கயம் நகராட்சி பொதுநிதி **2018–19** ன் கீழ் ரூ.**1.50** இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் பராமரிப்பு பணிக்காக **15.06.18**–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு.எஸ்.சுப்பையா | மதிப்பீட்டை விட - 0.10 % | குறைவு |
| 2.திரு.ஆர்.வடிவேல் | மதிப்பீட்டை விட + 0.40 % | அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட - 0.10 % சதவீதம் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எஸ்.சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 914 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:16**

**கோப்பு எண் : 1747/2016/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி **2018–19** ன் கீழ் ரூ.**0.50** இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அய்யாச்சாமி நகர் காலணி நீரூந்து நிலையம் மற்றும் தண்ணீர் பந்தல் நீரூந்து நிலையம் ஆகியவற்றில் உள்ள ஹைப்போகுளோரினேட்டர் கருவிகளை வருடாந்திர பராமரிப்பு பணிக்காக **15.06.18**–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திருவாளர்.ஸ்ரீ சபரி என்ஜினியரிங் | மதிப்பீட்டை விட - 0.10 % | குறைவு |
| 2. திருவாளர்.ஸ்ரீ ராஜ கணபதி என்ஜினியரிங் | மதிப்பீட்டை விட + 0.35 % | அதிகம் |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட - 0.10 % சதவீதம் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர்.ஶ்ரீ சபரி என்ஜினியரிங் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.915 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:17</u>**

**கோப்பு எண் : 596/2017 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பதுமன்குளத்தை தன்னார்வ தொண்டு நிறுவனம் சுத்தம் செய்ய அனுமதி கோரியதின் பேரில் **13.06.2018** அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கீழ்க்கண்டுள்ள விபரங்களுடன் பதுமன் குளத்தை சுத்தம் செய்ய விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க மாவட்ட ஆட்சியரால் அறிவுறுத்தப்பட்டது.

1. நகராட்சி பகுதிகளிலிருந்து பதுமன் குளத்திற்கு செல்லும் கழிவுநீர் தினசரி அளவு
2. மேற்படி கழிவுநீரின் தன்மை
3. மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆய்வு அறிக்கை
4. பதுமன்குளத்தை சுத்தப்படுத்த தேவையான தொழில் நுட்பத்துடன் கூடிய விரிவான திட்ட அறிக்கை

மேற்படி நடவடிக்கைகளில் முதற்கட்டமாக நகராட்சி வடிகாலிலிருந்து பதுமன் குளத்திற்கு செல்லும் கழிவு நீர் அளவு கணக்கிடப்பட வேண்டும். இதற்கு தேவையான தொழில்நுட்பத்துடன் கூடிய தகுதிவாய்ந்த நிறுவனத்தை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.50,000/–(ரூபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.916 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:18</u>**

**கோப்பு எண் : 826 /2018/அ1**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான திருப்பூர் ரோடு நுழைவு வாயில் வடபுறமுள்ள கடை எண்.**1** ஐ திரு.என்.பழனிச்சாமி கவுண்டர் அவர்கள் உரிமம் பெற்று நடத்தி வந்தார், அன்னார் காலமாகி விட்டபடியால் வாரிசு அடிப்படையில் அவரது மகன் திரு.ஏ.பி.செந்தில்குமார் தனது பெயருக்கு குத்தகை உரிமத்தினை பெயர் மாற்றம் செய்து தர கோரி விண்ணப்பித்துள்ளார். இறந்தவருக்கு திருமதி செல்வாத்தாள் (மனைவி), திருமதி.சரஸ்வதி (மகள்), திரு.செந்தில்குமார் (மகன்) ஆகியோர் வாரிசு என வட்டாட்சியர் அவர்களால் சான்று வழங்கப்பட்டுள்ளது. வருவாய் வட்டாட்சியர் கடிதம் ப.மு **123/2016**/அ**1**, நாள். **19.01.2016** இக்கடையின் குத்தகை உரிமத்தினை திரு.ஏ.பி.செந்தில்குமார் என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய ஆட்சேபனை இல்லை என செல்வாத்தாள் மற்றும் சரஸ்வதி ஆகிய இருவரும் உறுதி

சான்று அளித்துள்ளனர். எனவே அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.3.7.2007–ல் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி உரிய பெயர் மாற்ற கட்டணம் செலுத்தியுள்ளார். எனவே திருப்பூர் ரோடு நுழைவாயில் வடபுறமுள்ள கடை எண்.1–ஐ திரு.பழனிச்சாமி கவுண்டர் பெயரிலிருந்து திரு.ஏ.பி.செந்தில்குமார் என்ற பெயருக்கு மாற்றம் செய்து கொடுக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.917 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:19**

**கோப்பு எண் : 912 /2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சக்தி நகர் பகுதியில் உள்ள தார்சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த தார்சாலையை சீரமைத்து பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 23.00 இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்து மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 918 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:20**

**கோப்பு எண் : 1045 /2018 /இ1**

காங்கயம் நகராட்சிக் பகுதிகளுக்கு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் மற்றும் அமராவதி குடிநீர் திட்டத்தின் மூலம் தினசரி 3.25 எம்.எல்.டி அளவுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி முறையே அய்யாச்சாமி நகர் காலனி நீருந்து நிலையம் மற்றும் தண்ணீர்ப்பந்தல் நீருந்து நிலையத்தில் குளோரினேசன் செய்வதற்கு நீருந்து நிலையத்தில் ஹைபோகுளோரினேட்டர் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இதில் உள்ள 0.5 எச்.பி திறன் உள்ள மின்மோட்டார் உள்ளது. இவை பழுதடையும் சமயத்தில் இவைகளை சரி செய்யும் வரை குளோரினேசன் செய்யும் பணிகளில் தடை ஏற்படாதவாறு மாற்று மின் மோட்டார் வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 4.50 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.919. நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:21**

**கோப்பு எண் :975/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட மூர்த்திரெட்டிபாளையம் AD காலணியில் சாலையின் இருபக்கமும் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. இதில் சாலையின் தென்புற பகுதியிலிருந்து நம்ம டாய்லட் அருகில் சாலையை கடந்து வடபுறம் அமைக்கப்பட்டுள்ள வடிகாலில் இணைத்து வடிகால் அமைக்கப்படவுள்ளது. இந்த இணைப்பு வடிகால் சாலையில் வருவதால் போக்குவரத்து வசதிக்காக இந்த வடிகாலின் மேல் ஒரு பாலம் அமைக்கப்படவேண்டியுள்ளது. இப்பணி பொதுமக்கள் நலன் கருதி அவசியமானதாக உள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 1.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.920 . நாள்.29.6.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:22**

**கோப்பு எண் :1026/2018 /இ1**

காங்கயம் நகராட்சி அலுவலகத்தில் நிர்வாக வசதிக்காக கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1),வருவாய் பிரிவில் தடுப்பு அறைகள் அமைத்து LAN CONNECTION வசதிகள் செய்தல்.

2).அலுவலகத்தில் மின்விளக்கு மற்றும் மின்விசிறி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.

3).அலுவலகம் முன்புறமாக உள்ள அறைகளை பராமரிப்பு பணிகள் செய்தல்.

4).அலுவலக உபயோகத்திற்கு பயன்படும் குடிநீர் தொட்டி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.

மேற்படி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 2.00 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.921 . நாள்.29.6.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:23**

**கோப்பு எண் :1025/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட செம்மாங்காளிபாளையத்தில் அமைக்கப்பட்டுள்ள OHT-யில் பழுதுகள் ஏற்பட்டு தண்ணீர் கசிவு ஏற்படுகிறது. எனவே, இதில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. தாராபுரம் ரோடு பகுதியில் சாலையின் மேல்புறமாக சர்ச் பகுதியிலிருந்து தெற்கே செல்லும் வடிகால் பழுதடைந்துள்ளது. இப்பகுதியில் மேற்காக பிரிந்து செல்லும் சாலையின் குறுக்காக ஒரு பாலம் அமைக்க வேண்டியுள்ளது. எனவே, மேற்படி மேல்நிலைத்தொட்டி மற்றும் வடிகால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 1.40 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.922 . நாள்.29.6.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:24**

**கோப்பு எண் :998/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்கு செந்தமான அமராவதி ஆற்று குடிநீர் திட்டத்தின் நீரேற்று நிலையத்தில் (தாளக்கரை) Treatment Plant-ல் Backwash செய்யப்படும் ஏர் புளோயர் இயக்கப்பயன்படும் 15 கு.வே. மின்மோட்டார் வைண்டிங் மற்றும் பழுதுகள் ஏற்பட்டு இயக்க இயலாத நிலையுள்ளது. இதனால் Treatment Plant Backwash செய்ய இயலவில்லை. Treatment Plant முழுத்திறனுடன் இயங்காததால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, குடிநீர் அவசர அவசியம் கருதி மின்மோட்டார் ரீவைன்டிங் செய்து பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 0.40 இலட்சத்திற்கு (ரூபாய் நாற்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.923 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:25**

**கோப்பு எண் :1024/2018 /இ1**

காங்கயம் நகராட்சியில் திருப்பூர் ரோடு நெடுஞ்சாலைப் பகுதியில் எம்.ஜி.ஆர் காடு மற்றும் ஐ.பி டேங்க் செல்லும் மெயின் குழாய் மற்றும் விநியோக குழாய்கள் (அமராவதி மற்றும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்ட குழாய்கள்) அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழாய்கள் அமைக்கப்பட்டு 18 முதல் 35 ஆண்டுகள் ஆகிறது. இதனால் இதன் திறன் மிகவும் குறைந்துள்ளது. இந்நிலையில் இந்த நெடுஞ்சாலையை நெடுஞ்சாலைத் துறையினரால் அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதற்காக மண்தோண்டி Wetmix அமைப்பது மற்றும் Vibrator Roller மூலம் அழுத்துவது போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது. இதனால் மேற்படி பம்பிங் குழாய்களில் பழுதுகள் ஏற்பட்டு தண்ணீர் அதிகமாக வீணாகிறது. இதனால் குடிநீர் வினியோகம் செய்ய இயலாத நிலையுள்ளது. எனவே, குழாய்கள் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 1.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண். 924 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:26**

**கோப்பு எண் :1004/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 1வது வார்டு திரு.வி.க நகரில் வடிகால் மற்றும் சிமெண்ட் சாலைகள் பழுதடைந்துள்ளது. இதனால் வடிகாலில் கழிவுநீர் செல்ல வழியின்றி தேங்கியுள்ளது. சிமெண்ட் சாலைகள் பழுதடைந்துள்ளதால் போக்குவரத்திற்கு பொதுமக்கள் மிகவும்

சிரமப்படுகிறார்கள். பொதுமக்கள் நலன் கருதி இந்த சாலைகள் மற்றும் வடிகாலை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளவேண்டியுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 9.70 இலட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்தி எழுபது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 925 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:27</u>**

**கோப்பு எண் :976/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 1 வது வார்டு புலிமா நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வடிகால் மற்றும் சிமெண்ட் சாலைகள் பழுதடைந்துள்ளது. இதனால் வடிகாலில் கழிவுநீர் செல்ல வழியின்றி தேங்கியுள்ளது. சிமெண்ட் சாலைகள் பழுதடைந்துள்ளதால் போக்குவரத்திற்கு பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். பொதுமக்கள் நலன் கருதி இந்த சாலைகள் மற்றும் வடிகாலை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளவேண்டியுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 6.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஆறு இலட்சத்திற்கு மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 926 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:28</u>**

**கோப்பு எண் :955/2011 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சொந்தமான எரிவாயு தகனமேடையில் கீழ்க்காணும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

1). Body Bricks, Castable Bags Replacement and Reconditioning செய்யப்பட வேண்டும்.
2). LPG பர்னர் மற்றும் காப்பர் பைப் பழுதுகள்.
3). Smoke out Brickwork Full service செய்யப்பட வேண்டும்.
4). Cley Bag Replacement and Reconditioning செய்யப்பட வேண்டும்.

மேற்படி பணிகள் அவசியமாக மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 1.30 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி முப்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 927 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:29</u>**

**கோப்பு எண் : 1035/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட தாராபுரம் ரோடு பகுதியிலிருந்து காந்திபுரம் செல்லும் தார்சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதாகவும் தார்சாலையை சீரமைத்து கொடுக்குமாறும் இப்பகுதி பொதுமக்கள் கோரி வருகின்றனர். இப்பகுதி அவசியமானதாக உள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.7.90 இலட்சத்திற்கு (ரூபாய்ஏழு இலட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.928 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:30</u>**

**கோப்பு எண் : 1052/2018 /இ1**

காங்கயம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சென்னிமலை ரோடு பகுதியில் உள்ள குப்பைக்கிடங்கில் மேம்பாடு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்கு உலர்ந்த குப்பைகளை windrow முறையில் உரம் தயார் செய்யப்படுவதற்கு ஏதுவாக இங்கு உலர்த்தும் குப்பைகளை சிறு துண்டுகளாக வெட்டுவதற்கு ஒரு Shredder machine மற்றும் இதனுடன் ஒரு conveyor belt structure வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.8.70 இலட்சத்திற்கு (ரூபாய் எட்டு இலட்சத்து எழுபது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.929 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:31</u>**

**ந.க.எண்.593 / 2017/ டி1**

காங்கயம் நகராட்சியில் 2018–2019 – ஆம் நிதியாண்டிற்கு பொதுப்பிரிவு, பொறியாளர் பிரிவு, கணினி பிரிவு, பொது சுகாதாரப்பிரிவு ஆகிய பிரிவுகளில் உள்ள பிரிண்டர்களுக்கு டோனர் நிரப்ப வேண்டியுள்ளது. இதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 930 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:32**

**கோப்பு எண் : 1070 /2018 /இ1**

காங்கயம் நகராட்சி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பொதுக் கழிப்பிடங்களில் குழாய் பழுது, கதவு பழுது போன்ற பழுதுகள் ஏற்பட்டுள்ளது, இதனால் கழிப்பிடத்தை உபயோகபடுத்தும் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இந்த கழிப்பிடங்களை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது, இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 1.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 931 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:33**

**கோப்பு எண் : 1083/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அய்யாசாமி காலணி மேற்கு, MPN நகர், உடையார் காலணி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளது, இதனால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள், எனவே இந்த சாலைளை சீரமைக்க வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 23.00 இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்துமூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.932 . நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:34**

**கோப்பு எண் : 1091/2018 /இ1**

காங்கயம் நகராட்சி பகுதிகளில் தார்சாலைகளில் குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளும் பொழுது சாலைகளில் பள்ளம் தோண்டுவதால் தார்சாலைகள் சேதமடைந்துள்ளது. இதனால் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே இதனை சரிசெய்ய சாலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.933. நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:35</u>**

**கோப்பு எண் : 1053 /2018 /இ1**

காங்கயம் நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய அமராவதி குடிநீர்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் தலைமை நீரேற்றும் நிலையம் தாளக்கரை எனும் இடத்தில் அமராவதி ஆற்றின் கரையில் அமைக்கப்பட்டுள்ளது, இத்தலைமை நீரேற்றும் நிலையத்தில் 100HP HSC பம்ப்செட் இரண்டு பொருத்தப்பட்டுள்ளது. இதில் ஒரு மின்மோட்டார் தற்சமயம் (2016) புதியதாக பொருத்தப்பட்டுள்ளது. ஒரு மின்மோட்டார் பொருத்தி முப்பது ஆண்டுகளுக்கும் மேல் ஆகிறது.இந்த மின் மோட்டார் திறன் இழந்ததனால்அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு இயங்காத நிலையில் உள்ளது. தொடர்ந்து அடிக்கடி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது, இதனால் அனேகமான காலங்களில் ஒரு மோட்டார் மட்டும் இயக்கும் நிலை உள்ளது. எனவே இதற்கு புதியதாக ஒரு பம்ப்செட் (1800 RPM X 120 M Head ) பொருத்தப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் நீருந்து நிலையம் தாராபுரம் ரோடு பகுதியில் காங்கயத்திலிருந்து 5கி.மீ தொலைவில் தண்ணீர்பந்தல் பகுதியில் உள்ளது. இங்கு இரண்டு 50எச்.பி மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு தண்ணீர் ஏற்றப்படுகிறது. இதில் ஒரு மின்மோட்டார் கடந்த ஆண்டு புதியதாக மாற்றி பொருத்தப்பட்ட நிலையில் ஒரு மின்மோட்டார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக அதன் திறன் இழந்த நிலையில் இயங்தி வருகிறது, எனவே அடிக்கடி பழுது ஏற்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் போதுமான அளவு தண்ணீர் உந்துவதில்லை. எனவே இந்த மின்மோட்டார் மாற்றி பொருத்தப்பட வேண்டும்.

மேற்படி பணிகள் அவசியமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது, மேலும் தற்சமயம் அமராவதி ஆற்றில் வருடத்திற்கு 10 மாதங்கள் குடிநீர் எடுக்கும் அளவிற்கு நீர்வரத்து உள்ளது. எனவே மேற்படி மின்மோட்டார் மாற்றி பொருத்தும் பணி அவசியமாகும். இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 25.00 இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 934. நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
**<u>மன்றப்பொருள்:36</u>**

**கோப்பு எண் :1060/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சிறுவர் பூங்கா பகுதியில் குப்பைகள் உருவாகும் இடத்திலேயே உரம் தயாரிக்கும் (Onsite Compost) பணிக்கு தொட்டிகள் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த தொட்டிகளில் மழைநீர் விழாத வண்ணம் மேற்கூரை அமைக்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 0.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.935. நாள்.29.6.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:37</u>**

**கோப்பு எண் :1065 /2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான அமராவதி ஆற்று குடிநீர் திட்டத்தின் தலைமை நீரேற்று நிலையம் தாளக்கரை பகுதியில் அமைந்துள்ளது. இந்த தலைமை நீரேற்று நிலையத்தில் மின்மோட்டார்கள் இயக்குவதற்கு மின்விநியோகம் செய்ய தனி Transformer நகராட்சி பராமரிப்பில் உள்ளது. இந்த Transformer-க்கு மாற்று Transformer ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மாற்று Transformer ஏற்கனவே பழுதடைந்துள்ள நிலையில் உபயோகத்தில் உள்ள Transformer-ம் பழுதடைந்துள்ளது. இதனால் சீரான மின்வினியோகம் கிடைப்பது சிரமமான சூழ்நிலை உள்ளது. இதனால் மின்மோட்டார்கள் தொடர்ந்து இயக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த இரண்டு Transformer-களையும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு சீரமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 3.50 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சத்தி ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 936 . நாள்.29.6.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:38</u>**

**கோப்பு எண் :1069/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அய்யாச்சாமி காலணி நீருந்து நிலையத்திலிருந்து எம்.ஜீ.ஆர் காடு மேல்நிலைத்தொட்டிகளில் தண்ணீர் ஏற்றும் பொழுது நீரேற்றுக்குழாய் (Pumping line) அடிக்கடி பழுதடைந்து தண்ணீர் வீணாகிறது. இதனால் குடிநீர் வினியோகம் பாதிப்படைகிறது. இந்த குறைபாட்டை சரிசெய்தால் மட்டுமே குடிநீர் வினியோகம் சீரான முறையில் செய்ய இயலும். Pumping குழாய்கள் அமைத்து 18 ஆண்டுகள் முடிவடைந்துள்ளது. இதனால் குழாயின் திறன் குறைந்துள்ளது. இதனை சரிசெய்ய மேல்நிலைத்தொட்டியின் மேல் தண்ணீர் ஏற்றுவதற்கு பதிலாக மேல்நிலைத்தொட்டியின் கீழாக ஒரு தொட்டி அமைத்து அதிலிருந்து மேல்நிலைத்தொட்டிக்கு Pumping செய்யலாம். இதனால், Pumping குழாயில் அழுத்தம் குறைந்து அடிக்கடி பழுது ஏற்படாமல் இருக்கும் வாய்ப்பு உள்ளது. இப்பணி குடிநீர் அவசர அவசியம் கருதி உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 9.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்தி ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 937 . நாள்.29.6.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**(ஒ.ம்) சு.சு. சுரேஷ்குமார்**
**ஆணையாளர்**
**மற்றும் தனிஅலுவலர்**
**காங்கயம் நகராட்சி**

**/ உண்மை நகல் /**

**மேலாளர்**
**காங்கயம் நகராட்சி**